செய்தி வெளியீடு எண்: 169 நாள்: 28.02.2020

## செய்தி வெளியீடு

## தமிழ்நாடு அரசு, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

### அகரமுதலி இயக்ககத்தில் பள்ளி மாணவர்களுக்கான மாநிலப் போட்டிகள்!

### வெற்றியாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன!

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தில் 28.2.2020ஆம் நாளன்று தமிழ் அகராதியியல் நாள் விழாவை முன்னிட்டு, பள்ளி மாணவர்களுக்கு மாநில அளவிலான சொல்லாக்கப் போட்டியும் ஓவியப்போட்டியும் நடைபெற்றன. இவற்றில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு முதல் பரிசாக ரூ.10,000/–மும் இரண்டாம் பரிசாக ரூ.5000/–மும் வழங்கப்பட்டன.

தமிழ் அகராதியியல் அமைப்பு முறைக்கு முன்னோடியாக விளங்கிய வீரமாமுனிவரின் பிறந்த நாளான நவம்பர் 8ஆம் நாளை ஆண்டுதோறும் தமிழ்அகராதியியல் நாளாகக் கொண்டாடவும் அதனை முன்னிட்டு, பன்னாட்டுக் கருத்தரங்கம் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு மாநில அளவிலான போட்டிகள் நடத்தவும் அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

அந்த அரசாணைக்கிணங்க கடந்த 8.11.2019 ஆம் நாள் சென்னை எத்திராசு மகளிர் கல்லூரியில் தமிழ் அகராதியியல் நாள் தொடக்க விழா நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக 28.2.2020 வெள்ளியன்று செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் சார்பில் சென்னை தரமணியில் உள்ள மையத் தொழில்நுட்பப் பயிலகக் கருத்தரங்கக் கூடத்தில் பள்ளி மாணவர்களுக்கு மாநில அளவிலான சொல்லாக்கப் போட்டியும் ஓவியப் போட்டியும் நடைபெற்றன.

சொல்லாக்கப்போட்டி:

இன்றைய கணினி உலகத்தில் நாள்தோறும் பல துறைகள் புதிது புதிதாக வளர்ந்து வருவதால் துறைகள் சார்ந்த சொற்களுக்கு இணையான தமிழ்க்கலைச் சொற்களை வடிவமைத்து வழங்குவது தமிழ் மொழியின் வளர்ச்சிக்கான முதன்மைப் பணிகளில் ஒன்றாக உள்ளது.

எனவே தமிழ்க் கலைச் சொல்லாக்கம் குறித்த புரிதலை மாணவர்களிடம் ஏற்படுத்தி அதன் மூலம் தமிழின் சொல்வளத்தைப் பெருக்குவதற்கு வகைசெய்யும் நோக்கில் பள்ளி மாணவர்களுக்குக் கலைச்சொல்லாக்கப் போட்டி நடத்தப்பட்டது.

சொல்லாக்கப் போட்டியில் பங்கேற்ற மாணவர்கள் கொடுக்கப்பட்ட ஆங்கிலச் சொற்களின் பொருளறிந்து அதன் செயல், வடிவம் உள்ளிட்டவற்றை உணர்ந்து அதனடிப்படையில் பொருத்தமான தமிழ்க் கலைச்சொற்களைத் தந்து தங்களின் இரு மொழிப் புலமையைப் பறைசாற்றினர்.

சொல்லாக்கப் போட்டியில் தருமபுரி மாவட்டம் பாலக்கோடு பகுதியில் உள்ள மாதிரி பள்ளி மாணவர் கி.ராகுல் கண்ணா முதல் பரிசும், திருச்சி புனித பிலோமினா பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி ர. மஞ்சுஸ்ரீ இரண்டாம் பரிசும் பெற்றனர்.

<u>ஓவியப் போட்டி:</u>

சொற்களையும் அவற்றின் பொருள்களையும் தெளிவாகத் தெரிந்துகொண்டவர்கள்தான் மொழிப்பற்று மிக்கவர்களாகவும் சிறந்த படிப்பாளிகளாகவும் சிறந்த படைப்பாளிகளாகவும் மிளிர முடியும். எனவே இளம்தலைமுறை மாணவர்களின் தமிழ்ச் சொற்பொருள் புரிதல் பற்றிய ஆர்வத்தையும் அவர்களின் ஓவிய படைப்பாற்றலையும் ஒருசேர ஊக்குவிக்கும் வகையில் ஓவியப் போட்டி நடத்தப்பட்டது.

ஓவியப்போட்டியில் பங்கேற்ற மாணவர்கள், கொடுக்கப்பட்ட தமிழ் இலக்கியப் பாடல் வரிகளில் உள்ள சொற்களின் பொருள் அறிந்து அதற்கேற்பக் கலைநயமிக்க ஓவியங்களை வரைந்து தம் கைவண்ணத்தையும் தமிழ்ப் புலமையையும் வெளிப்படுத்தினர்.

ஓவியப் போட்டியில் தேனி மாவட்டம் இராயன்பட்டிப் பகுதியில் உள்ள புனித ஆக்னேஸ் மேல்நிலைப்பள்ளி மாணவி நா.விஷ்ணுபிரியா முதல் பரிசும், சேலம் மாவட்டம் சின்னப்பம்பட்டி பகுதியிலுள்ள அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர் மு. பாலாஜி பிரசாத் இரண்டாம் பரிசும் பெற்றனர்.

முதற்பரிசு பெற்ற மாணவர்களுக்கு தலா ரூ.10,000/–மும் இரண்டாம் பரிசு பெற்ற மாணவர்களுக்கு தலா ரூ.5,000/– மும் பரிசுத் தொகையாக வழங்கப்பட்டன.

பள்ளிக்கல்வி இயக்கக இயக்குநர் முனைவர் ச. கண்ணப்பன் அவர்கள் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுத் தொகையையும் பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கிச் சிறப்பித்தார்.

போட்டிகளில் பங்கேற்ற அனைத்து மாணவர்களுக்கும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக இயக்குநர் திரு. தங்க. காமராசு அவர்கள் பங்கேற்புச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**